**Pastoral letter No/GR/ 14 / 2013**

# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

இத்திருமுகத்தின் வாயிலாக உங்களை சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைவதோடு இறைவனின் அருளையும், ஆசீரையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இத்திருமுகத்தின் வாயிலாக நமது விசுவாசத்தின் மிக சிறந்த நிகழ்வான கிறிஸ்து பிறப்பை உங்களுடன் சிந்திக்க விரும்புகிறேன். நாம் மங்கள வார்த்தை காலத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவிற்காக ஆயத்தமாகின்றோம். கடவுள் மனித உருவேற்று நம்மிடையே வாழ்ந்தார். என்பது வரலாற்றில் மகிழ்ச்சியின் ஒரு நிகழ்வாகும். இது குடும்ப ஒன்றிப்பினுடையவும், ஒற்றுமையினுடையவும் மறு ஒன்றிப்பினுடையவும் நாளாகும். எனவே நமது குடும்பங்களிலும், பங்குகளிலும் ஆராதனை வழிபாடுகளுக்காக இந்நாளில்அவரது பெயரால் ஒன்று கூடுவோம்.

இன்று நாம் ஒலி நிறைந்த உலகில் வாழ்கிறோம். கைபேசிகள், தொலைக்காட்சிகள், மின் அஞ்சல்கள், குறுந்தகவல்கள், வலைதள பக்கங்கள் என இன்னும் பல. இது ஒலி நிறைந்தது மட்டுமல்ல, நமது கவனத்தை திசைமாறச் செய்வதுமாம். நமது கவனம், நேரம் மற்றும் ஆற்றல் போன்றவைகள் சிதறடிக்கப்படுவதோடு வாழ்வை மகிழ்ச்சியாக வைத்து பிரச்சனைகள் நீங்கி வாழ உதவுகின்ற வகையில் வாக்குறுதிகளுடனான விளம்பரங்களும் விண்ணப்பங்களும் இன்றைய உலகில் உண்டு. இச்சூழலில் கடவுளுக்காக ஏதாவது நேரம் உண்டா? இந்த மங்கள வார்த்தை காலத்தில் கடவுளுடனான நமது உறவை தடை செய்கின்ற இப்படிப்பட்ட சூழல்களிலிருந்துமாறி நமக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய கொடையைப் பற்றிய சிந்தனையில் இருக்கவும், அமைதியான ஜெபத்தில் வாழவும் கடவுளிடமிருந்து ஆற்றல் பெறுவோம்.

இயேசுவை சந்தித்த போது மாற்றங்கள் உருவான மக்களின் கதைகளால் நிறையப்பட்டதே நற்செய்தி நூல். **சமாரியப் பெண்** விசுவாசத்தை மீண்டும் கண்டுக் கொண்டாள். பார்வையற்ற மனிதன் **பார்த்தலமேயு** பார்வையை பெற்றுக் கொண்டது மட்டுமல்ல அவன் ஆண்டவரை பின்செல்பவராக தன்மைமாற்றினார்**.** வரி வசூலிக்கும் **சக்கேயு** இயேசுவை சந்தித்த பிறகு அவனது வழிகளை மாற்றி கொண்டதோடு தாராள மனதுடைய நேர்மையாளராக மாறினான். இதுபோன்ற ஏராளமான மனிதர்கள் இயேசுவுக்கு அவர்களின் வாழ்வின் அறைகளைத் திறந்து வைத்தார்கள். அதனால்

அவர்கள் நன்மைகளை பெற்றுக் கொண்டார்கள். அவர்களே நமக்கு முன் மாதிரி. அவர்களே நமக்கு நாயகர்களும், நாயகிகளும். பெத்லகேமின் விடுதிகளில் இயேசுவுக்காக அறைகள் இல்லாத காரணத்தினால் இயேசு மாட்டு தொழுவத்தில் பிறந்தார் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இன்று இயேசு நம்மிடம் வருகின்ற போது இயேசுவுக்காக அறைகள் நம்மிடம் உள்ளதா? நீங்களே உங்கள் இதயத்தின் காப்பாளர்கள். உங்கள் வாழ்வில் மக்கள் உள்ளே வரவும், தங்கவும் அனுமதிப்பவர்கள். நீங்கள் தான் அவர்கள் இடத்தை விட்டு செல்லவும் கேட்டுக் கொள்கிறவர்கள். இந்த முறையில் இயேசுவுக்கான அறையை தேர்ந்தெடுப்பவர்களும் நீங்களே.

கடவுள் நமக்கான அறையை உருவாக்கினார். மற்றொரு கோணத்தில் நாம் இக்கருத்தை சிந்திப்போமேயானால், கடவுள் தனது ஒரே மகனை உதவியற்ற ஒரு குழந்தையாக இவ்வுலகிற்கு அனுப்பியதன் வாயிலாக நம்மை மீட்டுக் கொண்டார். கடவுளுக்கு இது மாற்று விதங்களில் செய்திருக்க முடியும். இயேசுவுக்கு அதிகாரத்துடனும் மாட்சியுடனும் வந்திருக்கவும் முடியும். ஆனால் அவரது திட்டம் மாட்டுத்தொழுவத்தில் பிறக்க வேண்டும் என்பது தான். அவருக்கு பணிப்பெண்களோ, மருத்துவர்களோ, செவிலியர்களோ, சிறந்த கவனிப்புக்களோ கிடைக்கவில்லை. அவர் பட்டு துணிகளிலல்ல மாறாக வைக்கோல் மேல்தான் தூங்கினார். அவர் விலங்குகளால் சூழப்பட்டிருந்தார். இந்த புனிதமான நிகழ்வுக்கு மரியாவும், சூசையப்பரும் சாட்சி களாயினர்

மக்களுக்கான அரசர்கள் இந்த வழியில் அல்ல பிறந்தது. அனைவரையும் ஏற்றுக் கொள்கிறேன் என்பதை தெரிவிக்கும் விதத்தில் தான் இயேசு இந்த தாழ்மையான நிலையை தேர்ந்தெடுத்தார். அன்பான சகோதர, சகோதரிகளே, நாம் செல்வந்தர்களாகவோ, அதிகாரம் படைத்தவர்களாகவோ, வசதி படைத்தவர்களாகவோ, கற்றுத் தேர்ந்தவர்களாகவோ இருக்க வேண் டுமென்பதில்லை**.** மாறாக, நாம் நாமாகவே இருப்போம். இயேசுவுக்கு மிக நல்லவர்களென்றோமிக கெட்டவர்களென்றோ இல்லை. அவரிடம் அனைவருக்குமான அறைகள் உள்ளன. அவர் நம்மையே தாங்கிக் கொள்வதில் ஓய்வின்றி இருக்கிறார். நாம் அவருக்காக நேரத்தை ஒதுக்க வேண்டாமா? இயேசு கூறுகிறார். **“இதோ நான் கதவுக்கருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் உள்ளேச் சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்”** (தி.வெ. 3:20). இதிலிருந்து நமது இதயத்தில் இயேசுவின் வீட்டைக் கட்டிக் கொள்ள எவ்வளவு அன்புடனும், விருப்பத்துடனும் இருக்கிறார் என்பது தெரிகிறது.

இயேவே உலகில் மிகப்பெரிய செல்வந்தர்! இயேசு எல்லாமிருந்தும் நாம் செல்வராகுமாறு (2 கொரி-8:9) அனைத்தையும் உதறித் தள்ளினார். அவரின் வாழ்வில் நமக்கு அறைகளை உருவாக்குவதற்காக அவர் ஏழையானார். நம்முன் வருகின்ற கேள்வி நான் ஏழையாக இருக்கிறேனா? ஏழை ஒருவன் வாய்ப்பு கிடைக்கும் போது

செல்வந்தனாக முயல்கின்றான். அதுபோன்று ஏழை விடுதிகாப்பாளன் செல்வமிக்க சிறந்த விருந்தினர்களை காணும்போது அவர்களுக்கு விருந்தளிக்க விரும்புகிறான். ஒரு ஏழை மனிதன் கதவைத் திறந்து ஆர்வத்துடன் மகிழ்வோடும், எளிமையுடனும் மிகப்பெரிய ஆளை தனது விடுதிக்கு வரவேற்கின்றான். அன்பான இறைமக்களே, உங்கள் இதய அறையை ஆண்டவருக்காக அறையை உருவாக்குங்கள். கதவை திறவுங்கள். அவர் உள்ளே வந்து உங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஆசீராலும், செழிப்பினாலும் உங்களை நிரப்புவாராக.

கடந்த இரண்டு மாதங்களாக விசுவாச ஆண்டோடு சேர்ந்து மறைக்கல்வி நிலையத்தின் தலைமையில் நடைபெற்ற விவிலிய கண்காட்சியை சிறப்புறச் செய்த அனைத்து அருள்தந்தையர்கள், அருள்கன்னியர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலான இடங்களை நான் பார்வையிட்டேன் அனைத்தும் சிறப்பாக அமைந்தது. வாழ்த்துக்கள். மேலும் அருள்தந்தை தோமஸ் தெக்கேயில் அவர்கள் நோய்வாய்பட்டு இருந்த வேளையில் அவருக்காக செபித்த அவரை சந்தித்த மற்றும் அவருடைய இறுதிசடங்கில் பங்கேற்ற அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அருள்தந்தையின் ஆன்ம இளைபாற்றிக்காக தொடர்ந்து செபிப்போம்.

அத்தோடு நமதுமறைமாவட்டத்தில பணி செய்கின்ற அனைத்து அருட்பணியாளர்களுக்காகவும் அருள் சகோதரிகட்காகவும் தொடர்ந்து இறைவனை வேண்டுவோம்

டிசம்பர் 6,7,8 தியதிகளில் படந்தாலுமூட்டில் நடைபெற்ற நற்செய்தி கொண்டாட்டத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுகளும்.

வருகின்ற ஜனவரி 18 ம் தியதி 4 மணிக்கு மணிக்கு வாழ்த்தபட்ட **சாவறா குரியாக்கோஸ்** அவர்களின் சிறப்பு திருப்பலி பிளாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் வைத்து நடைபெறும், அதில் கலந்து கொண்டு இறைஆசீர் பெற அனைவரையும் அழைக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் தூய ஆவியால் நிறையப்பட 2014-ம் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்காக ஜெபிப்பதோடு, கடவுளின் ஆசீயையும் நான் வேண்டுகிறேன்.

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**
தக்கலை மறைமாவட்ட ஆயர்